விரிவானம்

இயல் 1

# சொலவடைகள்
## (பொம்மலாட்டம்)

**முன்னுரை:**

பொம்மலாட்டத்தில் வரும் பையன்தான் இக்கதையின் கதாநாயகன். அவன் ஒழுங்காகப் பள்ளிக்கூடம் போகாமல் ஊரைச் சுத்திக்கிட்டு வருகிறான். அவங்க அம்மா எவ்வளவோ சொல்லியும் அவன் கேட்கவில்லை. அவனோட பிடிவாதத்தை யாராலும் மாற்ற முடியவில்லை.

**பெற்றோர் அறிவுரை :**

ஒரு நாள் அவன் அப்பா அவனைக் கூப்பிட்டு, "இப்ப நீ சரியாகப் படிக்க வில்லையென்றால் வாழ்க்கையில் முன்னேற முடியாது. ஒழுங்காக பள்ளிக்கூடம் போய் படிக்கிற வேலையைப் பார்" என்று கூறினார். அம்மாவும் அவனுக்கு அறிவுரைக் கூற முதலில் மறுத்த பையன் பிறகு சரி என்று சொல்லி பள்ளிக்கூடம் சென்றான்.

**விளையாட்டுக்கு அழைத்தல் :**

அவன் பள்ளியை விட்டு ஓட்டம் பிடிக்கிறான். வழியில் விளையாட யாராவது கிடைப்பாங்களான்னு பார்க்கிறான். அங்கே எறும்பு ஒன்று போய்க் கொண்டிருந்தது.

பையன் எறும்பைக் கூப்பிட, எறும்பானது எனக்கு நிறைய வேலை இருக்கு. நான் என் குழந்தைகளுக்கு உணவு கொடுக்கனும். அரிசி, நெய் எல்லாம் சேகரிக்கனும் என்று சொல்லி சென்றுவிட்டது.

அடுத்தது தேனீ. எனக்குத் தேன் எடுக்கிற வேலை இருக்கிறது என்று சொல்லி அதுவும் சென்றுவிட்டது. அடுத்தது மாடு. நான் என் முதலாளிக்கு உப்பு மூட்டை, புளி மூட்டை எல்லாம் சுமக்கனும் நான் வரவில்லை என்று கூறியது. அடுத்தது ஆமை. நான் என்னைவிட வேகமாக ஓடுகிற முயலோடு போட்டி வைத்துள்ளேன். கொஞ்ச நேரம்கூட வீணாக்காமல் நடந்தாக வேண்டும் என்று சொல்லி சென்று விட்டது.

அடுத்தது முயல். போன முறை ஆமையிடம் தோற்றுப் போய் விட்டேன். இந்த முறையாவது நான் வெற்றி பெற்றாகனும். அதனால் நான் வேகமாக ஓட வேண்டும் என்று சொல்லி குட்டிச் சுவருடன் போய் விளையாடு என்று சொல்லியது.

**பாடம் கற்றல் :**

பையனும் மகிழ்வுடன் குட்டிச் சுவற்றில் ஏறி அமர்ந்தான். பழைய சுவரானதால், அது இடிந்து விழுந்தது. அதில் இருந்த எறும்பு, பூச்சிகள் எல்லாம் உனக்குத்தான் வேலை இல்லை என்று சொல்லி அவனைக் கடிக்க அவன் வீட்டை நோக்கி ஓடினான்.

**முடிவுரை :**

வீட்டிற்குச் சென்ற பையன், அம்மாவிடம் உலகத்தில் இருக்கின்றவர்கள் எல்லாம் அவர்கள் வேலையைப் பார்க்கிறார்கள். இனிமே நானும் சும்மா இருக்காமல் ஒழுங்காகப் பள்ளிக்கூடம்

விரிவானம்

இயல் 2

# இந்திய வனமகன்
## (நேர்காணல்)

**முன்னுரை :**

அஸ்ஸாம் மாநிலத்தின் ஜோர்விராட் மாவட்டத்தைச் சேர்ந்த ஜாதவ்பயேங், பிரம்மபுத்திரா ஆற்றின் நடுவில் உள்ள மிகப் பெரிய தீவில் முப்பது ஆண்டுகள் தனது கடின உழைப்பால் ஒரு காட்டை உருவாக்கியவர். 'இந்தியாவின் வனமகன்' என்று அழைக்கப்படுபவர்.

**மரங்களின் மீது ஆசை :**

1979ஆம் ஆண்டு பிரம்மபுத்திரா ஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்தால் அடித்து வரப்பட்ட பாம்புகள் அத்தீவில் கரை ஒதுங்கின. அங்கு மரங்கள் இல்லாததால் பல செத்துப்போயின. இதைக் கண்ட அவருக்கு அங்கு மரங்கள் வளர்க்க வேண்டும் என்று எண்ணம் தோன்றியது. அதற்காக ஊர் மக்களிடம் உதவியை நாடிய பொழுது, யாரும் உதவ முன் வரவில்லை.

### மூங்கில் காடு :

தன் கைகளில் கிடைத்த விதைகளை விதைத்து நாள்தோறும் தண்ணீர் ஊற்றினார். ஆயினும் ஒரு விதைகூட முளைக்கவில்லை. பிறகு வனத்துறையினரை அணுகியபோது 'அத்தீவில் மூங்கில் மரம் மட்டுமே வளரும்' என்று கூறினர். உடனே மூங்கில்களைக் கொண்டு வளர்க்கத் தொடங்கினார்.

### மண்ணின் மாற்றம் :

மூங்கிலைத் தவிர வேறு எந்த மரமும் வளரவில்லை. அப்போதுதான் அசாம் வேளாண்மைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜாதுநாதிடம் சென்று மரம் வளர்க்கும் திட்டம் பற்றிக் கூறினார். உடனே அவர், 'மண்ணின் தன்மையை அதற்கு ஏற்ப மாற்ற வேண்டும். அதற்கு மண் புழுக்கள் மட்டுமின்றிச் சிவப்புக் கட்டெறும்புகளும் உதவும்' என்று கூறினார்.

எறும்புகளைக் கொண்டு வந்து அங்கு விட ஆரம்பித்தார். கட்டெறும்புகள் ஊர்ந்து செல்லச் செல்ல மண்ணின் தன்மை சிறிது சிறிதாக மாறத் தொடங்கியது. அவர் நட்ட மரங்கள் அனைத்தும் வளர்ந்தன.

### புதிய காடு உருவாக்குதல் :

ஒரு பழம் சாப்பிட்டால் கூட அதன் கொட்டையை வீசி எறியாமல் விதையாகச் சேர்த்து வைத்தார். பிறகு மழைக்காலம் தொடங்குவதற்கு முன் விதைகளை எடுத்து அத்தீவில் தூவத் தொடங்கி விடுவார். இப்படி ஒவ்வோர் ஆண்டும் அவர் தூவிய விதைகள்தாம் இன்று காடாக அங்குக் காட்சி அளிக்கின்றது.

### முடிவுரை :

காட்டில் பறவைகள் வந்து தங்கின. பறவைகளின் எச்சத்தால் பரவிய விதைகள் அந்தக் காடு வளர மேலும் துணை புரிந்தன. பிறகு முயல், மான், காட்டுமாடுகள், யானைகள், பாம்புகள், கழுகுகள், காண்டா மிருகங்கள்,புலிகள் என்று அனைத்து உயிரினங்களும் வந்து தங்க காடு முழுமை அடைந்தது. இவ்வாறு ஜாதவ்பயேங் காட்டை உருவாக்கினார்.

விரிவானம்

இயல் 3

# கப்பலோட்டிய தமிழர்

### முன்னுரை :

தென்னாட்டில் உள்ள தூத்துக்குடி அந்நாளில் எந்நாட்டவரும் அறிந்த துறைமுக நகரம். அந்நகரின் பெருமையைத் தம் பெருமையாக்கிக் கொண்டவர் சிதம்பரனார். அவர் தன்னலம் துறந்த தனிப்பெரும் தொண்டர். 'இந்திய கடலாட்சி எமதே' எனக் கருதி இறுமாந்திருந்த ஆங்கிலேயர் பொறி கலங்கி, நெறி மயங்கக் கப்பலோட்டிய தமிழர் சிதம்பரனார்.

### சுதேசி கப்பல் :

இந்நகரில் சுதேசக் கப்பல் கம்பெனி ஒன்று உருவானது. பாரதநாட்டுச் செல்வரும் அறிஞரும் அந்தக் கம்பெனியில் பங்கு கொண்டார்கள். பாண்டித்துரையார் அக்கம்பெனியின் தலைவர் ஆனார். சிதம்பரனார் செயலாளர் ஆனார். கப்பல் வெள்ளோட்டம் பார்ப்பதற்காக தூத்துக்குடியில் இருந்து கொழும்புத் துறையை நோக்கிப் புறப்பட்ட நாளில், சிதம்பரனார் உள்ளத்தில் இன்பம் பொங்கி எழுந்தது; கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

## ஆங்கிலேயரின் அடக்குமுறை :

அன்று முதல் சுதேசக்கப்பல் வாணிகம் வளர்ந்தது; வெள்ளையர் வாணிகம் தளர்ந்தது. அதனால் அவர்களின் உள்ளம் எரிந்தது. வெறுக்கத்தக்க சூழ்ச்சிகளைக் கையாண்டனர். சுதேசிக் கம்பெனி வேலையினின்று சிதம்பரனார் விலகிக் கொண்டால் நூறாயிரம் ரூபாய் கையடக்கம் தருவதாக மறைமுகமாகக் கூறினர். சிதம்பரனாருக்கு உற்ற துணையாக இருந்த நண்பர்களையும் பலவாறு பயமுறுத்தினர்.

## சிறைவாசம் :

பொதுக் கூட்டங்களிலும் சிதம்பரனார் பேசும்பொழுது, வந்தே மாதரத்தை அழுத்தமாகச் சொல்வது வழக்கம். அதைக் கேட்டு நாட்டு மக்கள் ஊக்கமுற்றவர்கள்; உணர்ச்சி பெற்றார்கள். அதனால் சிதம்பரனார் மீது குற்றம்சாட்டிக் கைது செய்தது ஆங்கிலேய அரசு. சிதம்பரனார்க்கு, இரட்டைத் தீவாந்தர தண்டனை வழங்கப்பட்டது. ஆறாண்டு கோவைச் சிறையிலும், கண்ணூர்ச் சிறையிலும் கொடும்பணி செய்தார். சிறையில் செக்கிழுத்தார். ஆனால், சிறையில் இருக்கும்போது தமிழ் நூல்களைப் படித்துத் தன் துயரைப் போக்கினார்.

## எழுத்துப்பணி :

ஆலன் என்பவர் இயற்றிய அறிவு நூல்களில் ஒன்றை மனம்போல் வாழ்வு என்று தமிழில் மொழிபெயர்த்தார். மெய்யறிவு, மெய்யறம் என்ற சிறு நூல்களை இயற்றினார். இவற்றைத் தமிழ்த்தாயின் திருவடிகளில் கையுறையாக வைத்தார். சிறையில் இருந்து இயற்றிய நூல்களையும் உவந்து ஏற்றுக் கொள்ளுமாறு செந்தமிழ்த்தாயின் திருவருளை வேண்டினார்.

## விடுதலை :

சிறை வாழ்வு முடிந்ததும், தூத்துக்குடியை வந்தடைந்தார். அருமை குழந்தைகளைக் கண்டு ஆனந்தமுற்றார். ஆயினும் ஆசைக்குழந்தையான தேசக்கப்பலைத் துறைமுகத்தில் காணாது ஆறாத்துயருற்றார். 'பட்ட பாடெல்லாம் பயனற்றுப் போயிற்றே' என்று பரிதவித்தார். 'என்று வருமோ நற்காலம்' என்று ஏங்கினார்.

## முடிவுரை :

இன்று இல்லாவிட்டாலும் என்றேனும் சுதந்திரம் வந்தே தீரும். வீரசுதந்திர வெள்ளம் புறப்பட்டுவிட்டது. அதைத் தடுத்து நிறுத்த யாரால் ஆகும் பாரதநாட்டிலே? என்று தம்மனதில் சொல்லிக் கொண்டு கடற்கரையை விட்டு அகன்றார்.